தேர்தல் நடக்கும் நாளில்

# வெளிமாநிலத்தவருக்கு ஊதியத்துடன் விடுமுறை அளிக்க வேண்டும்

## தொழிலக பாதுகாப்பு இணை இயக்குநர் அறிவிப்பு



மதுரை, ஏப்.25: தேர்தல் நாளில் வெளிமாநிலத்தவருக்கு ஊதியத்துடன் விடுமுறை அளிக்க வேண்டும் என தொழிலக பாதுகாப்பு இணை இயக்குநர் அறிவித்துள்ளார்.

மதுரை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் வேலுமணி வெளியிட்டுள்ள அறிக்கை:

சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரபிரதேசம் உள்ளிட்ட வெளிமாநிலங்களைச் சேர்ந்த வாக்குரிமை பெற்ற பலர் பணியாற்றுகின்றனர். கர்நாடகாவில் நாளை மற்றும் மே 7ம் தேதி என, இரு கட்டங்களாகவும், கேரளாவில் நாளையும், ஆந்திராவில் மே 13ம் தேதியும் நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இந்த மாநிலங்களில் வாக்குரிமை உடைய தினக்கூலி, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்கள் தேர்தல் நடக்கும் நாளில் சொந்த மாநிலங்களுக்கு சென்று வாக்களிக்க ஏதுவாக, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951, 135(பி)ன் கீழ் ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும். விடுமுறை அளிக்காத தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்கள் தொடர்பாக தமிழ்நாட்டில் தங்கி பணிபுரியும், மேற்கண்ட மூன்று மாநிலங்களை சேர்ந்த தொழிலாளர்கள் புகாரளிக்க, மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் புகாரளிக்க விரும்புபவர்கள், 98652-22938, 82484-63905, 99410-12190, 78713-87668, 99445-17244, 0452-2530729 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோடைகால நீச்சல் பயிற்சி முகாம்



▶ சிவகங்கை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் கோடைகால நீச்சல் பயிற்சி முகாம் நடைபெற்றது.

கோடை வெயிலால் விற்பனை ஜோர்

# மடப்புரம் தென்னந்தட்டிக்கு கிராக்கி

## வீடுகள், கடைகள் முன் கட்டினால் வெப்பத்தின் தாக்கத்தை குறைக்கும்



▶ திருப்புவனம் அருகே மடப்புரத்தில் தென்னந்தட்டிகள் பின்னும் பணியில் ஈடுபட்டுள்ள பெண் தொழிலாளர்கள்.

திருப்புவனம், ஏப்.25: கோடை வெயில் தாக்கம் அதிகரித்துள்ளதால் மடப்புரம் தென்னந்தட்டிகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தமிழத்தில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து 113 டிகிரி வரை எகிறியுள்ளது. வெயிலில் இருந்து பாதுகாக்க பயன்படும் தென்னந்தட்டிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வைகை ஆற்றை ஒட்டியுள்ள திருப்புவனம், மடப்புரம், லாடனேந்தல், திருப்பாச்சேத்தி, மழவராயனேந்தல் உள்ளிட்ட கிராமங்களில் சுமார் ஒன்றரை லட்சத்திற்கும் அதிகமான தென்னை மரங்கள் உள்ளன. இப்பகுதியில் தேங்காய் உற்பத்தி தவிர தென்னை சார்ந்த உபரி தொழில்களும் நடந்து வருகின்றன. தென்னை மட்டைகளில் இருந்து தட்டிகள், விசிறிகள், தேங்காய் மட்டைகளில் இருந்து கயிறுகள் உள்ளிட்டவை குடிசை தொழிலாக தயாரிக்கப்பட்டு மதுரை, திருச்சி, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

பெண்கள் வீட்டிலேயே தட்டி பின்னுகின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும் 50 முதல் 100 பேர் வரை தட்டி பின்னும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நாள் ஒன்றுக்கு 10 முதல் 15 தட்டிகள் வரை பின்னுகின்றனர். தென்னந்தோப்புகளில் மொத்தமாக மட்டைகளை வாங்கி வந்து கீறி தட்டிகள் பின்னுகின்றனர். ஒரு மூன்று மட்டை தட்டி 100 ரூபாயில் இருந்து தட்டுப்பாட்டை பொறுத்து 150 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. விசிறி 20 ரூபாய், பெருக்கு மாரு 15 ரூபாய் என விற்பனை செய்கின்றனர். மற்ற பகுதிகளில் பின்னப்படும் தட்டிகளை விட மடப்புரம் பகுதி தட்டிகள் மிகவும் நெருக்கமாகவும், எளிதில் பிரிந்து போகாது என்பதால் வியாபாரிகள் விரும்பி வாங்கி செல்கின்றனர். பொதுவாக கோடை காலங்களில் வீடுகள், கடைகள் ஆகியவற்றின் முன்புறம் தென்னந்தட்டிகளை பயன்படுத்தி மேற்கூரை அமைப்பது வழக்கம். இதன் மூலம் வீட்டினுள் வெப்பத்தின் தாக்கம் வெகுவாக குறையும்.

இந்தாண்டு வழக்கத்திற்கு மாறாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் ஆட்டோ, வேன் உள்ளிட்ட சரக்கு வாகனங்களில் கூட மேற்புறம் தென்னந்தட்டிகளை வைத்து இறுக்கமாக கட்டி வலம் வருகின்றனர். தட்டி தயாரிக்கும் தொழிலாளர்கள் கூறுகையில், நாள் ஒன்றுக்கு 10 முதல் 15 தட்டிகள் வரை பின்னுவோம். வருடம் முழுவதும் வேலை இருக்கும், தற்போது சாலை ஓரங்களில் தற்காலிக கடைகள் அமைக்க தென்னந்தட்டிகள் வாங்கி செல்கின்றனர். வீடுகளிலும் வெப்பத்தின் தாக்கத்தை குறைக்க தென்னந்தட்டிகளை பயன்படுத்துவதால் கிராக்கி ஏற்பட்டுள்ளது. வியாபாரிகள் முன்கூட்டியே ஆர்டர் செய்து தட்டிகள் வாங்கி செல்கின்றனர் என்றனர்.

சிவகங்கை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில்

# முழுநேர பட்டய பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்



சிவகங்கை, ஏப்.25: சிவகங்கை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் முழுநேர பட்டய பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இராஜேந்திர பிரசாத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் ஓர் அங்கமாக செயல்படும் சிவகங்கை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் 2024-25ம் கல்வியாண்டில் நடைபெற உள்ள முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சிக்கான மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான முன்பதிவு வரும் 29ம் தேதி துவங்குகிறது. செப்டம்பரில் பயிற்சி துவங்கி நடைபெறும். பயிற்சி காலம் ஓராண்டாகும். இருபருவ முறைகளில் பயிற்சி நடைபெறும். பயிற்சிக்கான பாடத்திட்டம் தமிழில் மட்டுமே நடத்தப்படும். விண்ணப்பிப்பதற்கான தேதி மற்றும் பயிற்சி கட்டண விபரங்கள் விரைவில் வெளியிடப்படும். இதில் பங்கேற்க விரும்புவோர் குறைந்தபட்ச கல்வி தகுதி பிளஸ் 2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் 17 வயது பூர்த்தியடைந்தவராக இருக்க வேண்டும். www.tncuicm.com என்ற இணையதளத்தின் மூலமே விண்ணப்பிக்கலாம். கூடுதல் விபரங்களுக்கு திருப்பத்தூர் சாலை, காஞ்சிரங்காலில் செயல்படும் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தை தொடர்பு கொள்ளலாம். மேலும் 04575-243995 என்ற எண்ணையும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சித்திரை திருவிழா தீர்த்தவாரியுடன் நிறைவு

சிவகங்கை, ஏப்.25: சிவகங்கை சமஸ்தானம், தேவஸ்தானத்திற்குட்பட்ட நாட்டரசன்கோட்டை பிரசன்ன வெங்கடாஜலபதி பெருமாள் கோயிலில் ஆண்டு தோறும் சித்திரை திருவிழா நடந்து வருகிறது. இந்த ஆண்டு ஏப்.15 அன்று முகூர்த்தக்கால் நடப்பட்டு சித்ரா பவுர்ணமி விழா தொடங்கியது. ஏப்.22 அன்று காப்புகட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. நேற்று முன்தினம் அதிகாலை கோயிலில் இருந்து வெள்ளிக்குதிரையில் புறப்பட்ட அழகர் பல்வேறு இடங்களில் காட்சி தரும் நிகழ்ச்சி நடைபெற்றது. காலை 8.40 மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்களின் ஆரவாரத்துடன் வெண்பட்டு உடுத்தி அழகர் பூவாளம் ஆற்றில் இறங்கினார். இரவு 9 மணி முதல் தசாவதார நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து கோயில்கள் மற்றும் மண்டபங்களில் அழகர் காட்சி தருதல் மற்றும் தீர்த்தவாரி நிகழ்ச்சியோடு விழா நிறைவடைந்தது.


**பிற்சேர்க்கை IV-ஏ**

**அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு**

ஜாமீன் பெறுதல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுகட்டமைப்புச் செய்தல் மற்றும் ஜாமீன் நலன் அமலாக்கச் சட்டம், 2002-ன் கீழாக அசையாச் சொத்துக்களை ஈ-ஏல விற்பனைஅறிவிப்பு மற்றும் ஜாமீன் நலன் (அமலாக்க) விதிமுறைகள், 2002-ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) அதன் விதிமுறைகளுடன் சேர்த்துப் படிக்கவும்.

கீழே விவரிக்கப்பட்டுள்ள ஜாமீன் பெற்ற கடன் நிறுவனத்திற்கு ஈடுவைக்கப்பட்ட/ஒப்படைக்கப்பட்ட அசையாச் சொத்தை (ஜாமீன் பெற்ற கடன் நிறுவனம்) **இந்தியாபுல்ஸ் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் (CIN: L65922DL2005PLC136029) (''செக்யூர்ட் கிரெடிட்டர்'')** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, **கையகப்படுத்தியுள்ளார்** என்பது இதன் மூலமாக பொது மக்களுக்கும் குறிப்பாக கடன் பெற்றவருக்கும்(கள்) ஜாமீன்தாரருக்கும்(கள்) இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இது **எஸ் சத்தியா வசீஸ்வரன், ஆர் ராஜ பாண்டி, ஆர் ரவிக்குமார், ஆர் சத்தியா மற்றும் வேல்யூ டீல்ஸ் (தனது பார்ட்னர் மூலமாக)** ஆகியோர் ஜாமீன் பெற்றகடன் வழங்குபவருக்கு செலுத்த வேண்டிய **16.04.2024**-லிருந்து கடன் ஒப்பந்தம் விதிமுறைகளின்படி, சட்ட செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் **15.04.2024** தேதிவரை கடன்கணக்கு எண் **HLAPMAR00339913**-ன் மீதாக **ரூ. 65,33,425/- (ரூபாய் அறுபத்தைந்து லட்சத்து முப்பத்து மூன்று ஆயிரத்து நானூற்று இருபத்தைந்து மட்டும்)** நிலுவை அசல், பாக்கிகள் (தாமதகட்டணம் உட்பட) மற்றும் வட்டியை வசூலிப்பதற்காக **14.05.2024**-ம் தேதி **மாலை 04.00 முதல் மாலை 05.00 வரை** வரை **''எங்கிருக்கிறதோ அங்கு'', ''உள்ளது உள்ளபடி'',** மற்றும் **''எதுவாக இருந்தாலும்''** விற்பனை செய்யப்படும்.

அசையாச் சொத்துக்கான ஏல மதிப்பு **ரூ. 40,00,000/- (ரூபாய் நாற்பது லட்சம் மட்டும்)** ஆக இருக்கும் மற்றும் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை (''ஈஎம்டி'') ஏல மதிப்பில் 10%-க்குச் சமமான அதாவது **ரூ. 4,00,000/- (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்)** ஆகும்.

**அசையா சொத்தின் விவரம்:**

**சொத்து கதவு எண். 5/67 கொண்ட வீடு, மதிப்பீட்டு எண். 2345 கொண்டது, 1150 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலத்தில் கட்டப்பட்டது, பிளாட் எண். 39-ன் மேற்குப் பகுதியாக இருப்பது, யுடிஆர் புல எண். 151/1ஏ1ஏ, பட்டா எண். 199 கொண்ட, செட்டில்மென்ட் புல எண். 15/1, பழைய புல எண். 17/1-ல் அடங்கிய 0.82.5 ஏர்ஸ் கொண்ட நிலத்தில் அடங்கியது, கங்கை தெரு அமைந்துள்ளது, அத்திக்குளம் கிராமத்தி, மதுரை வடக்கு வட்டம், மதுரை மாவட்டம், தல்லாக்குளம் சார் பதிவு மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டத்தின் எல்லைக்குள் அமைந்தது, மற்றும் பின்வரும் எல்லைகளைக் கொண்டது:**

| | | |
|---|---|---|
| கிழக்கு | : | பிளாட் எண். 39-ன் கிழக்குப் பகுதி |
| மேற்கு | : | 20 அடி அகல தெற்கு வடக்கு ரோடு |
| வடக்கு | : | பிளாட் எண். 38-ல் உள்ள நிலம் |
| தெற்கு | : | 20 அடி அகல கிழக்கு மேற்கு ரோடு |

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஜாமீன் பெற்ற கடன் நிறுவனத்தின் இணையதளம், அதாவது கொடுக்கப்பட்டுள்ள www.indiabullshomeloans.com என்ற இணைப்பில் பார்க்கவும். தொடர்பு எண் : 0124-6910910, +91 7065451024; மின்னஞ்சல் முகவரி: auctionhelpline@indiabulls.com ஏலத்திற்கு, வருகை தரவும் www.auctionfocus.in

தேதி: 18.04.2024
இடம்: மதுரை

அங்கீகாரம் பெற்ற அதிகாரி
இந்தியாபுல்ஸ் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட்


# திருப்புத்தூர் அருகே

# மவுண்ட் சீயோன் சில்வர் ஜூபிலி பள்ளியில் உலக புவி தினம் நிகழ்ச்சி




▶ திருப்புத்தூர் அருகே மவுண்ட் சீயோன் சில்வர் ஜூபிலி பள்ளியில் உலக புவி தினத்தையொட்டி மாணவர்கள் ஓவியங்கள் வரைந்தனர்.

திருப்புத்தூர், ஏப்.25: திருப்புத்தூர் அருகே தென்கரையில் உள்ள மவுண்ட் சீயோன் சில்வர் ஜூபிலி சிபிஎஸ்இ பள்ளியில் உலக புவி தினம் கொண்டாடப்பட்டது.

திருப்புத்தூர் அருகே தென்கரையில் உள்ள மவுண்ட் சீயோன் சில்வர் ஜூபிலி சிபிஎஸ்இ பள்ளியில் வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்த குழந்தைகள் கையால் அச்சிடுதல், கிரீடம் தயாரித்தல், படம் வரைதல், பாடுதல், குப்பைகளை சுத்தம் செய்தல், பூகோளத்தை வண்ணமயமாக்குதல், இலை ஒட்டுதல் உள்ளிட்ட செயல்களில் ஈடுபட்டனர். விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஒவ்வொரு ஆண்டும் புவி தினத்தை நினைவுகூரவும் நடந்த நிகழ்ச்சியில் மாணவர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். இந்த முயற்சிகள் மூலம், மாணவர்கள் தங்களை மகிழ்விப்பது மட்டுமல்லாமல், நமது புவியை பராமரிப்பதன் முக்கியத்துவத்தை பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளையும் பெற்றனர்.







**ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்**

CIN: U67100TZ2014PTC020363

கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் ஸ்கொயர், 47வது தளம், N.C. கேல்கர்மார்க் R.G.கட்காரி சவுக், தாதர் (மேற்கு), மும்பை-400 028.
மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com I தொலைபேசி: 044-24323033
அதிகாரபூர்வ அதிகாரி கைபேசி எண். +91 9344684194/ +91 9864062068

**[பிற்சேர்க்கை-IV-A]**
**[விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]**
**அசையா சொத்து விற்பனைக்கான மின்-ஏலம் பொது அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) r/w 9(1) விதிகளுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (''சர்பாசி சட்டம்'') கீழ் அசையும்/ அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு**

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்கீழ் பெயரிடப்பட்ட கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, அது ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (OARPL), மேலும் கீழே உள்ள கணக்குகளின் முழு நிலுவையில் உள்ள கடன்களையும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி.லிட் (OARPL) (ஓம்காரா PS 22/2020-21 ஒப்பந்தங்கள் மூலம் பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படும்) உடமைப் பத்திர ஒப்பந்த தேதி 30.03.2021 இலிருந்து எடல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (உரிமைப்பட்ட நிறுவனம்) இன்படி OARPL இன் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **சுவாதீனம்** செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க, OARPL ஆனது நிலுவைகளை வசூலிக்க மேலும் கடனீடுகளை அமலாக்கம் செய்ய உரிமை பெற்றுள்ளது பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) சர்பாசி விதிகளின் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி; கீழ்க்காணும் சொத்தை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து கடனீட்டு கடனீந்தோராக OARPL நிலுவையில் கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக, **''உள்ளது உள்ளவிடத்தில்'', ''உள்ளது உள்ளவாறு'' மேலும் ''உள்ளது எதுவோ அது'' மற்றும் ''உதவிசாரா அடிப்படையில்''** விற்பனை செய்யவுள்ளது. பிரிவு 13(2) இன் கீழ் அனுப்பப்பட்ட கோரிக்கை அறிவிப்பின்படி சம்பந்தப்பட்ட கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் விவரம், கடனீட்டு கடனீந்தோர், உரிமையாளர், நிலுவைத் தொகை, சொத்தின் சுவாதீன தேதி, நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை, நாள் மற்றும் நேரம் ஆகியவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்களின் பெயர் | திரு. P.மணிமாறன், த/பெ: திரு. பாண்டி மற்றும் திருமதி. M. சாந்தி க/பெ: திரு. P.மணிமாறன் |

**கடனீட்டு சொத்து விவரம்:** திரு. P.மணிமாறனுக்கு, த/பெ: திரு. பாண்டியனுக்கு சொந்தமான சொத்து 06.12.2018 தேதியிடப்பட்ட விற்பனை பத்திர ஆவண எண்.5257/2018 இன்படி, தெப்பக்குளம் சார் பதிவு அலுவலகம், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், தெப்பக்குளம் சார் பதிவு மாவட்டம், மதுரை வடக்கு தாலுகா, தற்போது மதுரை கிழக்கு தாலுகா, கருப்பபிள்ளையாண்டாள் கிராமத்தில் நஞ்சை R.S.எண். 2/1A இன்படி 11 ஏக்கர் பரப்பு. இதில் மனை எண்.159 இன் மேற்கு பகுதியில் 1080 ச.அடி நிலமானது கட்டடப்பட்ட கட்டடத்துடன் அமைந்துள்ளது. எல்லைகள்: வடக்கு: கொண்டபதன் எல்லை மற்றும் சாலை, கிழக்கு: மனை எண்.159 இன் கிழக்கு பகுதியில் எஞ்சியுள்ள பகுதி, தெற்கு: சர்வே எண். 2/1A இல் உள்ள சாலை, மேற்கு: மனை எண்.158. அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கு மற்றும் தெற்கு பக்கம் 20 அடி, வடக்கு தெற்காக கிழக்கு மற்றும் மேற்கு பக்கம் 54 அடி என 696 ச.அடியில் கட்டடப்பட்ட வீட்டுடன் உள்ளது. இதற்கான மின் சேவை இணைப்பு எண். 05-105-026-1069, 05-105-026-823 மற்றும் 05-105-026-1070

| | |
|---|---|
| சொத்தின் உரிமையாளர்: | திரு. P.மணிமாறன் |
| கோரிக்கை அறிவிப்பு நாள்: | 15.06.2020 |
| கையக சுவாதீன நாள்: | 28.07.2022 |
| நிர்ணய விலை: | ரூ. 12,00,000/- (ரூபாய் பன்னிரெண்டு இலட்சம் மட்டும்) |
| முன்வைப்பு தொகை:- | ரூ. 1,20,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) |
| ஏலம் உயர்த்தும் தொகை:- | ரூ. 10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) |
| சொத்து பார்வையிடல் நாள் மற்றும் நேரம்:- | 29.04.2024 மற்றும் 08.05.2024 ஆகிய இரு நாட்களில் மதியம் 3.00 முதல் மாலை 4.00 மணி வரை |
| 23.04.2024 வரை உள்ள நிலுவை தொகை:- | ரூ. 35,30,958/- (ரூபாய் முப்பத்து ஐந்து இலட்சத்து முப்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து எட்டு மட்டும்) |
| கணக்கு விவரம்:- | கணக்கு எண்:- 344905001015, பயனாளி பெயர்:- ஓம்காரா PS33/2020-21 டிரஸ்ட், வங்கி பெயர்:- ஐசிஐசிஐ வங்கி, கிளை: பாந்த்ரா (கி) மும்பை, ஐஎப்எஸ்சி குறியீடு: ICIC0003449 |
| மின் ஏலத்தேதி மற்றும் நேரம்:- | 29 மே 2024 (புதன்கிழமை) நண்பகல் 12 மணி முதல் மதியம் 1 மணி வரை |
| ஏல விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்/ கேஒய்சி ஆவணம்/ முன்வைப்பு தொகையின் ஆதார ஆவணம்:- | 27 மே 2024 மாலை 4 மணி அல்லது அதற்கு முன்பாக |

ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனை விண்ணப்பத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டு கடனீந்தோரின் (OARPL) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநரின் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com ஐ பார்வையிடவும்

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) கீழ் r/w 9(1) விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு**

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர் / ஜாமீன்தாரர்களுக்கு கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6), r/w 9(1) மற்றும் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிகளின் கீழ், செலவு & செலவினங்களுடன் சேர்த்து இங்கே மேற்குறிப்பிட்டவாறு நிலுவைத்தொகைகளை செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்கும் அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் பொது ஏலம் மூலம் விற்பனை நடைபெறுவது குறித்து தகவல் அளிக்கும் 30 (முப்பது) நாட்கள் கட்டாய அறிவிப்பும் ஆகும். பணம் செலுத்தத் தவறினால், நிதிச்சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் புனரமைத்தல் மற்றும் 24.04.2024 முதல் கூடுதல் வட்டியுடன் சொத்துகளை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் மின்-ஏலத்தின் மூலம் செயல்படுத்தவும் அதிகாரப்பூர்வ அதிகாரி /கடனீட்டு கடனீந்தோரின் தனிவிருப்ப முடிவில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

(கார்த்தி கோவிந்தசாமி)
கைபேசி எண். 9344684194
அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்.
(ஓம்காரா பிஎஸ் 33/2020-21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)

நாள்: 25.04.2024
இடம்: சென்னை



விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு...
தினகரன்
8904156777
9.30 AM - 6.00 PM